
**ISSN : 2456-821X** *அவையம் 4(1)ஜூன், 2020. ப.எண் : 51-57*

புதிய அவையம்




# திருக்குறளில் சூழலியல்

**கோ.பெரியசாமி**
**முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்)**
**கணேசர் கலை& அறிவியல் கல்லூரி,**
**மேலைச்சிவபுரி, பொன்னமராவதி, புதுக்கோட்டை.**

=============================================================

*சூழலியலை ஆங்கிலத்தில் biodiversity என்று கூறுவார்கள். புவியின் இயற்கைச் சூழல் தொடர்பான பிரச்சனைகளைச் சரியாக கையாள்வதற்கு, மனிதருக்கும் இயற்கைச் சூழலுக்கும் உள்ள தொடர்புகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்ற கருதுகோள் சூழலியல் திறனாய்வின் அடிப்படையாக உள்ளது. அதன் அடிப்படையில் திருக்குறளில் காணப்படும் சூழலியல் சிந்தனைகள் பற்றி காண்போம்.*

**ஆறு**

*இயற்கைச் சூழலில் ஆறும் அதன் பயன்களும் மனித இனத்துக்கும் நாகரிக வளர்ச்சிக்கும் இன்றியமையாததாக விளங்குகிறது. ஆறும் நீரும் இன்று மாசு அடைந்து விட்டது. அதற்கு மனிதனே காரணமாக இருக்கிறான்.*

**"ஆற்றி னளவறிந் தீக" குறள் -*477***

என்கிறார் வள்ளுவர். "ஆற்றில் போட்டாலும் அளந்து போடு" என்னும் பழமொழி இத்திருக்குறளோடு ஒப்புநோக்கத்தக்கது. இக்குறள் செல்வத்தை அளவோடு வழங்க வேண்டும், என்னும் பொருள்படக் கூறி இருந்தாலும், சூழலியல் சிந்தனையையும் பதிவு செய்துள்ளது. மனிதன் தன்னுடைய பொருட்களை ஆற்றில் அள்ளிப் போட்ட செய்தியையும் இக்குறள் பதிவு செய்கிறது. போகி பண்டிகை அன்று பழைய ஓலைச்சுவடிகள் முதலான பல பொருட்கள் ஆற்றில் அள்ளிப் போடப்பட்டது. தனக்கு தேவையில்லை எனக்கருதிய குந்தி தேவி தன் குழந்தையாகிய கர்ணனை ஆற்றில் விட்டது. என மனிதன் தனக்குத் தேவை இல்லாதவற்றை ஆற்றில் அள்ளிப் போட்டவை ஏராளம். எதற்கும் ஓர் அளவுண்டு. இக்காலத்தில் மனிதன் தொழிற்சாலைக் கழிவுகள், திருப்பூர் சாயப்பட்டறைக் கழிவுகள், சென்னைக் கூவம் ஆற்றில் அனைத்துவிதமான கழிவுகளும் கலந்து விடுகிறது.

***"அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல" குறள் -151***

***"யாக்கை பொறுத்த நிலம்" குறள் -239***

என்ற வரிகளில் பொறுமைக்கு நிலம் ஒப்பாகும் என்கிறார் வள்ளுவர். அத்தகைய நிலமும் தன் பொறுமையை இழந்து மண்ணோடு மண்ணாக புதைந்துவிடும் என்பதை

***"மண்புக்கு மாய்வது மண்" குறள் - 996***

என்று மனித குலத்தை எச்சரிக்கவும் செய்கிறார். மனிதன் தன்னுடைய பண்புகளை இழந்தால் மட்டும் பூமி அழிவைத்தரும் என்பது மட்டும் அல்லாது மண்ணின் பண்புகளை மனிதன் சிதைத்தாலும் அழிவு ஏற்படும் என்பதை மனிதன் உணர வேண்டும்.

***நீர் மேலாண்மை***

***"குளவளாக் கோடின்றி நீர் நிறைந்தற்று" குறள் -523***

*கரையில்லாத குளப்பரப்பில் நீர் நிறைவது பயனற்றதாகும். என்று நீரை தடுப்பணை கட்டி சேமிக்க வேண்டும் என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வலியுறுத்தியுள்ளார்.*

***"நீரின்றி அமையாது உலகு" குறள் -13***

***"வானோக்கி வாழும் உலகெலாம் " குறள் -542***

*நீர் இல்லாமல் இந்த உலகம் இன்றியமையாது என்றும் உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் மழையை நம்பி வாழ்கின்றன. என்றும் வள்ளுவர் நீரின் அவசியம் பற்றி கூறுகிறார்.*

***"புறந்தூய்மை நீரானமையும்" குறள் -298***

*புறத்தூய்மை நீரால் அமையும் என்றது புற உடலுக்கு மட்டும் அல்ல புற உலகத்தின் தூய்மையும் நீரால் தான் அமையும் என்பதனை மனிதன் உணர வேண்டும். மண்ணில் சேரும் செயற்கைக் கழிவுகள், நெகிழிப்பை, குப்பைகள், தொழிற்சாலைக் கழிவுகள் முதலியன அனைத்தும் மழைப் பொழிவின் போது வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு அடித்துச் சென்று கடலில் கலக்கின்றன. நிலப்பரப்பு தூய்மை பெறுகின்றது.*

***"பருவத்தோ டொட்ட வொழுக்கல்" குறள்-482***

***"காலத்தோடு எய்த உணர்ந்து செயல்" குறள் -516***

*காலத்தோடு பொருந்துமாறு காரியம் செய்ய வேண்டும். அதுதான் செல்வம் நீங்காமல் கட்டும் கயிறு என்கிறார் வள்ளுவர். பருவத்தோடு பயிர் செய்வது மட்டும் அல்லாமல் மழை பொழியும் பருவத்தில் நீரை சேமிப்பதும் நீர் செல்வத்தை நீங்காமல் கட்டும் கயிறும் ஆகும். ஏரி, குளம், குட்டை என*

*நீர்நிலைகள் அமைத்து மனிதன் நீரைச் சேமித்து வைத்தான் என்பதும் திருக்குறளின் வழி அறிய முடிகிறது.*

*பருவ காலங்களில் மழை நீரை சேமிக்க வில்லை என்றால் கோடை காலங்களில் வறட்சி ஏற்படும். விலங்குகளுக்கும் கால்நடைகளுக்கும் நீர் இல்லாமல் அல்லல் பட நேரும் என்பதை*

***"ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு***

***இரவின் இளிவந்த தில்" குறள் -1066***

*தாகம் கொண்டு தவிக்கும் பசுவுக்காகத் தண்ணீர் வேண்டும் என இரந்து கேட்டாலும்கூட, அப்படிக் கேட்கும் நாவுக்கு, அதைவிட இழிவானது வேறொன்றுமில்லை. என்று நீரை சேமிக்காமல் வரும் துன்பத்தினை பற்றி வள்ளுவர் பதிவு செய்கிறார். இவ்வாறான கோடைக் காலங்களில் நீர் வேண்டி அலைந்து திரிந்தவன் நிலத்தடி நீரையும் பயன் படுத்தி இருக்கின்றான். அதனையே வள்ளுவர்*

***"தொட்டனைத் தூறும் மணற்கேணி" குறள் -396***

*மணற்கேணியில் தோண்ட தோண்ட நிலத்தடி நீர் ஊறியதை அறிந்து நிலத்தடி நீரை கோடைக் காலங்களில் பயன்படுத்தியது இதன் மூலம் புலனாகின்றது.*

***"நிலத்தியல்பால் நீர் திரிந்தற்றாகும் " குறள் -452***

*தான் சேர்ந்த நிலத்தின் தமையால் மழைநீர் தன் இயல்பை இழந்து, நிலத்தின் தன்மைக்கு ஏற்ப மாறிவிடும். மழைநீர் தனித்த தன்மை உடையது. அது, கரிசல் மண், செம்மண், மணலில் சேரும் போது அம்மண்ணின் தன்மைக்கு மாறி*

தன் இயல்பை இழந்து விடுகிறது. என்பதை சங்க கால மக்கள் அறிந்து இருந்தனர் என்பது புலனாகிறது. இதனையே,

***"செம்புலப் பெயல் நீர் போல***

***அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே" குறுந்தொகை- 40***

என்னும் வரிகளும் வள்ளுவன் வரிகளுக்கு வலு சேர்க்கும் விதமாக விளங்குகிறது.

***"வெள்ளத் தனைய மலர்நீட்டம்"குறள் -595***

தண்ணீரின் அளவுதான் குளத்தில் மலர்ந்துள்ள தாமரைத் தண்டின் அளவும் இருக்கும் என்பது பொருள். சங்ககால மக்கள் நீர் நிலைகளில் தாமரை, அல்லி முதலிய தாவரங்களை வளர்த்துள்ளனர். இத்தாவரங்கள் குளத்தில் உள்ள நீர் வற்றிப்போகாமல் வழி செய்ததாக நவீன அறிவியல் கூறுகின்றது.

பேரிடர் :

***"வெள்ளத்து அனைய இடும்பை" குறள் -622***

***"ஊழி பெயரினும் " குறள் -989***

***"வற்றல் மரந்தளிர் தற்று" குறள் -78***

இந்த குறள்கள் முறையே பெருவெள்ளம், பேரலை, கடும் வறட்சி ஏற்பட்டு மரங்கள் பட்டுப் போனதை புலப்படுத்துகின்றன. இவ்வாறான இயற்கை இடர்பாடுகளையும் மனித இனம் கடந்து வந்திருப்பதும் பேரிடர் சூழலை எதிர்கொண்டதும் அறிய முடிகிறது.

**பல்லுயிர்**

சூழலியல் சிந்தனையாளர்கள் இன்று வலியுறுத்தும் செய்தியானது உலகில் உள்ள பல்லுயிரிகளைப் பேண வேண்டும். இந்த கொள்கையே இயற்கை சமநிலையை சீர்படுத்தும் என்கின்றனர். இதை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவர் கூறியுள்ளார்.

***"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புக" குறள் -322***

***"மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க்கு இல்லென்ப***

***தன்னுயிர் அஞ்சும் வினை." குறள் -244***

பகிர்ந்துண்டு பல உயிர்களை பாதுகாப்பது மட்டும் அல்லாமல் நிலைபெற்ற உலகத்தில் உள்ள உயிர்களைக் காத்து, அருள் செய்து வாழ்கின்றவர்களுக்குத் தம் உயிரைக் குறித்து அஞ்சுகின்ற தீவினைகள் இல்லை என்னும் சிந்தனை இன்றைய சூழலியல் சிந்தனையாளர்களை வியப்பில் ஆழ்த்தும் சீரிய சூழலியல் கோட்பாடாக அமைகிறது.

**முடிவுரை**

பல்வேறு உயிரினங்கள் வாழ்கின்ற இந்த பூமியில் உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருட்கள் இரண்டும் இணைந்துள்ளது. நிலம், நீர், காற்று, நெருப்பு இவற்றின் சமநிலை மாறும்போது உயிர்களின் வாழ்க்கைச் சூழல் பாதிப்புக்கு உள்ளாகும். அந்த வகையில் வள்ளுவர் நீரை சேமிப்பதன் அவசியத்தையும் பூமியில் ஏற்பட்டுள்ள பேரிடர் இழப்புகளையும் உலகில் உள்ள பல்லுயிர்களை ஓம்ப வேண்டும் என்னும் கருத்தையும் பதிவு செய்து இருப்பது சூழலியல் சிந்தனைக்கு முன்னோடியாக அமைந்துள்ளது. மனிதனின் வாழ்க்கை சிறப்புடன்

விளங்கிட முதலில் இயற்கை சூழல் செம்மையாக அமைந்திட வேண்டும். மன்னன் தலை சிறந்து விளங்க மக்களை பேண வேண்டும். அதற்கு நல்ல இயற்கை சூழலை அமைத்துத் தர வேண்டும். என்று வள்ளுவர் கூறியிருப்பது சிறந்த சூழலியல் சிந்தனையாக விளங்குகிறது. அதைப் பின்பற்றி இந்த பூமியை பேண வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.